**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 94/2019 |
| Name | : | Shanmugam |
| P.W. | : | 7 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது தாராபுரம் வட்ட குண்டடம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.05.2019 ம் தேதி 20.30 மணிக்கு நான் கணியூர் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நாகேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலையக் குற்ற எண். 87/2019 இதச பிரிவுகள் 279, 304(ஏ) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 உடுமலைக்கும் அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் மகேந்திரன் அவர்களிடம் சமரப்பித்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நாகேந்திரன் என்பவர் புகார் கொடுத்தார். அவர் திண்டுக்கல் மாவட்டம் நாராயணபிள்ளை தோட்டம், செல்லண்டியம்மான் கோவில் தெருவைச் சேர்ந்தவர். புகாரில்

தான் goods வண்டியில் பாடல் பாடும் குழுவைச் சேர்ந்தவர் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த குழு பார்வை குறைபாடு கொண்ட நபர்களின் குழு என்றால் சரிதான். கடைக்கு செல்வதற்காக சாலையை கடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டு கருப்பையா பார்வை குறைபாடு உள்ளவர் என்றால் அதைப் பற்றி நான் விசாரிக்கவில்லை. சம்பவம் 21.05.2019 ம் தேதி 18.45.மணிக்கு சம்பவம் நடந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது அன்றே 20.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இருந்து கணியூர் காவல் நிலையம் 150 மீட்டர் தூரம் தான் இருக்கும் என்றால் சரியல்ல ½ கி.மீ தூரம் வரும்.

(2) அ.சா.1 நாகேந்திரனுக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் அதைப் பற்றி நான் விசாரிக்கவில்லை. அ.சா.1 புகாரை எழுதி கொண்டு வந்து கொடுத்தார். புகாரில் உள்ள வாசகங்கள் யாரால் எழுதப்பட்டது என்று நான் விசாரிக்கவில்லை. புகாரில் உள்ள வாசகங்கள் எழுதயுள்ள கையெழுத்தும், அ.சா.1ன் கையொப்பமும் வேறு, வேறு என்றால் அதைப் பற்றி நான் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.1ல் வேறுபாடு உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அ.சா.1 யிடம் பொய்யான புகாரைப் பெற்று தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்